உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.71/2024

பெயர் :கவிச்சந்திரன்(அ.சா.5)

தகப்பனார் பெயர் :அம்மாசி

கணவர் பெயர் :

வயது :62

கிராமம் :ஐவைத்தான்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.08.2025

முதல் விசாரணை:

1ம் எதிரியை தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். அ.சா.3 தீபன்சக்கரவர்த்தி, ஆகியோரை தெரியும் தீபன்சக்கரவர்த்தி அப்பா செல்வமணி அம்மா திலகம் ஆகியோரை தெரியும். சரவணகுகன் அ.சா.1ஐ தெரியும். நான் சண்டை நடந்த விபரத்தை கேள்விப்பட்டேன். 2வருடங்களுக்கு முன்பாக சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். நேரடியாக தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 10.01.2023ம் தேதி மாலை சுமார் 7.00 மணியளவில் தீபன் சக்கரவர்த்தி அ.சா.3.ன் அப்பா செல்வமணி காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டார் என்று இருவருக்கும், சண்டை நடந்ததாகவும், அப்போது 3ம் எதிரி அபிமன்னன் வீட்டிற்குள் சென்று அரிவாளை எடுத்து வந்ததாகவும், அ.சா.1ஐ நீ எதற்காக வந்து பேசுகிறாய் என்று கேட்டாகவும் அப்போது

வீட்டிற்குள் இருந்து அரிவாளை எடுத்து வந்து வெட்ட வந்ததாகவும் அப்போது அ.சா.1 தடுக்க முற்பட்ட போது மேற்படி அரிவாள் 1ம் எதிரி பிடிங்கி நீ எதற்காக இதை கேட்கிறாய் என்று கூறி செத்து தொலைந்து போடா என்று சொல்லி கொலை செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தலையில் வெட்டியதாகவும், அப்போது வெற்றிவேந்தன் 2வது எதிரி, அ.சா.1சரவணகுகனை பின்னால் கைகளை பிடித்து கொண்டதாகவும், கீழே கிடந்த இரும்பு பைப்பை எடுத்து 3வது எதிரியான அபிமன்னன், சரவணகுகனை உடம்பில் அடித்ததாகவும், ஆஜர் எதிரிகளும் 1ம் எதிரி செல்வேந்திரனும், அ.சா.1 , அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரை அடித்ததாகவும் அப்போது அருகில் இருந்த நான் விலக்கிவிட சென்றபோது இப்போ ஆள்வந்ததால் தப்பித்துக்கொண்டீர்கள் என்றும் என்றைக்காவது கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாக காவல்துறை விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.08.22 17:41:27 +0530

Assistant Sessions Judge

Melur